செய்தி வெளியீடு எண்.444/2010 நாள்: 18.6.2010

வேலூர் மாவட்டம் மாவட்ட சமூகநல அலுவலகத்தின் கீழ் காட்பாடி செங்குட்டை ராஜிவ் காந்தி நகரில் தமிழக அரசின் ஆதரவற்றோருக்கான குழந்தைகள் காப்பகம் மற்றும் துவக்கப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இக்காப்பகத்தில் 5 வயது முதல் 18 வயதிற்குட்பட்ட பெற்றோர்களை இழந்த ஆண்/பெண் குழந்தைகள் அனுமதிக்கப்பட்டு அப்பிள்ளைகளுக்கு உணவு, இருப்பிடம்,சீருடை,கல்வி,சுற்றுலா மற்றும் மருத்துவ வசதி போன்றவை காப்பகத்தில் சேரும் பிள்ளைகளுக்கு அரசால் இலவசமாக வழங்கப்படுகிறது.

<u>காப்பகத்தில் சேருவதற்கான நிபந்தனைகள்:</u>

1. 5-18 வயதிற்குள் உள்ள பெண் குழந்தைகள் (ம) 5-10 வயதிற்குள் உள்ள ஆண் சிறார்கள் இவர்களின் தாய்/ தந்தை/ பாதுகாவலர்களுக்கு ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.24000/- ஆக இருத்தல் வேண்டும்.

2. பெற்றோர் இருவரும் இல்லாத (ம) கவனித்துக் கொள்ள நெருங்கிய உறவினர் இல்லாத அனாதை (ம) கைவிடப்பட்ட குழந்தைகள்

3. குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.24000/- க்கு குறைவாக உள்ள கணவன் இறந்து தாயாரால் பராமரிக்கப்படும் குழந்தைகள் (அ) கணவனால் கைவிடப்பட்ட (அ) நீண்ட நாள் சிறையில் இருப்பதால் தாயாரால் பராமரிக்கப்படும் குழந்தைகள் (ம) தாயார் இறந்து தந்தையால் பராமரிக்கப்படும் குழந்தைகள் (அ) மனைவி நீண்ட நாள் சிறையிலிருப்பதால் தந்தையால் பராமரிக்கப்படும் குழந்தைகள்.

4. மனநிலை பாதிக்கப்பட்ட அல்லது தொழுநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோர்களால் கவனிக்க இயலாத குழந்தைகள்.

5. பெற்றோர் இருவரும் உயிருடன் இருந்தும் தந்தை பணி செய்து வருமானம் ஈட்ட முடியாத கடும் ஊனமுற்றோராக இருந்து தாயாரால் பராமரிக்கப்படும் குழந்தைகள்.

மேற்கண்டுள்ள தகுதிகள் உள்ளவர்கள் அரசு குழந்தைகள் காப்பகத்தில் சேர்ந்து தங்கி படிக்க விரும்புவோர் அதற்கான விண்ணப்பத்தினை வேலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் பி-பிளாக் 4வது மாடியில் உள்ள மாவட்ட சமூகநல அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையில் உரிய விண்ணப்பத்தினை பெற்று காப்பகத்தில் சேர்ந்து பயன்பெறலாம் என வேலூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**வேலூர்.**